[1974 சனவரி 29

குடிசைப் பகுதி மாற்றுப் பணிகளுக்கு மத்திய உதவி

*238 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதியை மாற்றி அமைத்திட 1971-72-ம் ஆண்டில் மத்திய-அரசு வழங்கியுள்ள கடன், மானியத் தொகைகள் முறையே எவ்வளவு?

மாண்புமிகு திரு க. இராசாராம் : 1969-ம் வருஷம் எப்ரல் 1-ம் தேதியிலிருந்து மத்திய அரசு மாநில அரசுக்கு மொத்த கடனாகவும், மொத்த மானியமாகவும் உதவி வழங்கி வருகிறது. தனித் திட்டங்களுக்கென மத்திய உதவி வழங்கப்படுவதில்லை. எனவே, அந்த நாளிலிருந்து குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் கடனும், மானியமும் மாநில அரசே கொடுத்துதவுகிறது.

திரு வை. பாலசுந்தரம் : குடிசைப் பகுதிகளைச் சீரமைக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களான பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங்களை எடுத்துக்கொண்டு பார்க்கும் பொழுது நம்முடைய மாநிலத்திற்கு மத்திய சர்க்கார் பாரபட்சம் காட்டுகிறது என்று கூறப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : மற்றைய மாநிலங்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் எதுவுமே இல்லை. தமிழ்நாடு என்றில்தான் குடிசை மாற்று வாரியம் என்ற திட்டம் இருக்கிறது. இதில் மத்திய சர்க்காரினுடைய உதவி எந்தவிதமான குறிப்பிட்ட பகுதிக்கும் இல்லை. அந்த வகையிலே இதில் மத்திய சர்க்கார் பாரபட்சம் காட்டுவதற்கு ஏதுக்கள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கு. காமாட்சி : உலக நாடுகளிலேயே போற்றப்படக்கூடிய அளவில் குடிசை மாற்று வாரியம் நம்முடைய தமிழகத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இதற்கு மத்திய சர்க்கார் உதவித் தொகை, கடன் தொகை எவ்வளவு சதவிகிதம், மானியம் எவ்வளவு சதவிகிதம் கொடுக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : இந்தக் குடிசை மாற்று வாரியம் திட்டத்தைப் பொறுத்த அளவில் மத்திய சர்க்காரினுடைய உதவி எதுவுமில்லை என்பதை ஏற்கனவே எடுத்துச் சொல்லிவிட்டேன். குடிசைகளை சீரமைப்பதற்கு அவர்கள் ஓரளவுக்கு உதவி செய்கிறார்கள். சென்ற ஆண்டு ரூ. 2½ கோடி வரையில் உதவி செய்திருக்கிறார்கள். அதைத் தவிர வேறு எதுவும் குறிப்பாக இல்லை. குடிசை சீரமைப்பை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். குடிசை மாற்றுவதை மத்திய சர்க்கார் இது வரையில் ஒத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன.

1374 சனவரி 29]

திரு. த. சோணையா : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகளை மற்ற மாநிலத்தவர்கள் அமைச்சர்கள் இம்மாதிரி திட்டத்தை அங்கேயும் செயல்படுத்துவதற்கு என்று வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்களா ? அப்படியானால் எந்தெந்த மாநிலத்தவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள்? மற்ற மாநிலத்தவர் மத்திய சர்க்காரால் தூது அனுப்பி இங்கே வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தத் திட்டங்களையெல்லாம் அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திர மாநில அமைச்சர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை தங்கள் மாநிலங்களில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Labour, the rate of interest that is charged for the loans from the Central Government and the time given for repayment ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மத்திய அரசிடமிருந்து கடன் எதும் நமது மாநிலம் பெறவில்லை. எனவே திருப்பித் தரவேண்டிய பிரச்சினையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. ஆர். சுப்பையா : ரூ. 2½ கோடி தொகை கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இதில் என்னென்ன திட்டங்கள், வேலைகள் அடங்கியிருக்கின்றன என்பதை கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த ரூ. 2½ கோடியில் செய்ய வேண்டிய காரியங்கள், குடிசை சுற்றுப் புறங்களில் துப்புறவு வேலை, விளக்கு போடுவது, முடிந்தால் ரோடு போடுவது ஆகியவைகளாகும். நமது நாட்டிலுள்ள பிரச்சினை, குடிசை பகுதிகளில் பாதை அமைப்பது என்பது முடியாது—இது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே, இந்த ரூ. 2½ கோடியை நேரடியாக பயன்படுத்த முடியவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் அடிப்படையில் சில மாதங்களுக்கு முன்பு திரு கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான Santhome சாலையிலுள்ள நிலத்திலே கட்டப்பட்டிருந்த குடிசைகளை அப்புறப்படுத்தி, அங்கே வாழ்ந்து கொண்டிருந்த குடிசை வாழ்மக்களை கடற்கரையோரத்தில் அவர்களுக்கு இடம் கொடுத்து குடியமர்த்தியிருக்கிறார்கள். அந்த இடத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை. குறிப்பாக விளக்கு இல்லை. கக்கூஸ்